பணிகளும் மற்றும் அங்கே பணிமனை ஏற்படுத்துவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்வாய் புறம்போக்கு அந்த வழித்தடத்திலே இருக்கிறது. அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. விரைந்து அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாய் புறம்போக்குக்காக பொதுப் பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட இடம் என்று பல ஆண்டுக்கு முன்பே இருந்தது. ஆனால் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில்தான் துரித நடவடிக்கையாக மேற்கொண்டு பொதுப் பணித்துறையின் மூலமாக அது கால்வாயாக இல்லை, அது வந்து சாலையாக உள்ளது என்று அந்த இடத்தை 684-லிலே (3) என்ற இடத்தில் 4.5 எக்டேரும்; 684 (2)-லிலே 2.5 எக்டேர் நிலத்தையும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவத்துக் கழகத்திற்கு அளித்து விட்டது. இதற்கு உண்டான நிதி ஆதாரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிவு செய்து இந்த ஆண்டிலேயே துவங்குவதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடப்பிலே கிடந்த திட்டங்கள் அனைத்தையும் எடுத்து புத்துயிர் கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு விரைந்து இந்தப் பணியை மேற்கொள்ளும்.

501—

வைத்தியநாதபுரம்- சரலூர் இணைப்புப் பாதையை நகராட்சிக்கு வழங்குதல்

***24921—** *டாக்டர் எம். மோசஸ்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகராட்சி 34-ஆம் வார்டில் வைத்தியநாதபுரம்- சரலூர் இணைப்புப் பாதை வருவாய்த்துறையின் கீழ் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த இணைப்புப் பாதையை இலவசமாக நகராட்சிக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலம் 'வாய்க்கால் புறம்போக்கு' என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே நகராட்சிக்கு இந்நிலத்தை இலவசமாக வழங்க இயலாது.

507—

கால்நடை மருந்தகங்களுக்கு மருந்து வழங்குதல்

*** 35756**—*திரு. கே. ஏ. மனோகரன்:*

திரு. மு. வெங்கடராம ரெட்டி:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோடைகாலத்தில் வரும் Foot and Mouth வியாதிகளுக்கு இங்குள்ள அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் இன்மையால் உடனடியாக அம்மருத்துவமனைகளுக்கு மருந்துகள் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடைகளுக்கு கோடைகாலங்களில் வரும் கால் மற்றும் வாய் நோய்களுக்கு உரிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு மத்திய அரசு நிதி உதவித் திட்டத்தின்மூலம் அரசு மருத்துவமனைகளில் போதிய மருந்து கையிருப்பில் வைக்கும்பொருட்டு, நடப்பாண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு மட்டும் 10,000 டோஸ்கள் கால் மற்றும் வாய் நோய்த் தடுப்பு மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

508—

பாண்டி வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டுதல்

***22583**—*திரு. வீ. சுப்பிரமணியன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—